கரூர் மேடையில் விஜய்யின் கண்ராவி நாடகம்!

தன்னுடைய அலட்சியத்தினாலும் பொறுப்பின்மையினாலும் கரூரில் 41 உயிர்கள் பலியானது குறித்து கொஞ்சம் கூட இரக்கமேயில்லாமல், மனசாட்சியைத் தூக்கியெறிந்துவிட்டு, இடைத்தேர்தலுக்கான பிரச்சாரத்தை ஜூலை 10 அன்று நடத்தியிருக்கிறார் முதலமைச்சர் விஜய். **சினிமாவில் விஜய் ஹீரோவாக இருக்கலாம். அரசியல் மேடையில் கோமாளியாக, அதுவும் பொய்யை மட்டுமே பேசி, சொந்தக் கட்சிக்காரர்களிடம் கைதட்டல் வாங்கும் கொடூரக் கோமாளியாகத் தன்னை வெளிப்படுத்தியுள்ளார்.**

2025ஆம் ஆண்டு செப்டம்பர் 27ஆம் நாள் ஏறத்தாழ 7 மணி நேரம் தாமதமாக கரூருக்கு விஜய் பிரச்சாரம் செய்யச் சென்றதால், நீண்ட நேரம் காத்திருந்த கூட்டத்தினர் நெரிசலுக்குள்ளாகியும், தண்ணீர் இல்லாமல் மயங்கியும் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், கூட்டத்தினரில் 41 பேர் இறந்து போனார்கள். அப்போதைய திராவிட மாடல் அரசும் அதன் முதலமைச்சரும் விரைந்து நடவடிக்கை எடுத்ததுடன், முதலமைச்சரே உடனடியாக கரூர் சென்று நிலவரத்தை அறிந்து, உயிர்ப்பலிகள் மேலும் அதிகமாகாமல் பாதுகாத்தார். ஆனால், இந்த ரீல் ஹீரோ விஜய், தனக்காகக் காத்திருந்தவர்கள் பலியாவதைப் பார்த்தபடியே, எந்தச் சலனமும் இல்லாமல் பிரச்சார வாகனத்தை விட்டு இறங்கி, காரில் திருச்சிக்கு விரைந்து வந்து, அங்கிருந்து சென்னைக்கு விமானத்தில் பறந்து வந்தார்.

திருச்சி விமான நிலையத்தில் விஜய்யை ஊடகத்தினர் பார்த்ததும், "சார்.. 30 பேருக்கு மேல செத்துப் போயிருக்காங்க சார்.. ஏதாவது சொல்லிட்டுப் போங்க சார்" என்று கேட்டபோது, அவர்களுக்கு முதுகு காட்டியபடி ஓட்டமும் நடையுமாகச் சென்ற பொறுப்பற்ற கோழைதான் விஜய். அதன் பிறகு, கரூர் பக்கமே வரவில்லை. தேர்தல் பிரச்சாரத்திற்கும் கரூருக்கு வரவில்லை. 285 நாட்கள் கழித்து, கரூருக்கு வந்து முதலைக் கண்ணீர் வடித்திருக்கிறார் முதலமைச்சர்.

41 உயிர்ப்பலிகளுக்கு இவர் மீது பழி போட்டுவிட்டதாம் தி.மு.க. அரசு. தமிழ்நாடே விஜய்யின் இரக்கமற்ற தன்மையை விமர்சித்த நிலையில், அன்றைய முதலமைச்சர் நம் கழகத் தலைவர்தான், "எந்த ஓர் அரசியல் தலைவரும் தன் தொண்டர்கள் இறப்பதை விரும்பமாட்டார்கள்" என்று தனக்கே உரிய அரசியல் முதிர்ச்சியுடன் அறிவித்தார். கத்துக்குட்டியும் வெத்துவேட்டுமான விஜய், திரும்பத் திரும்ப தன் மீது பழி போட்டதாகப் பொய் பேசித் திரிகிறார். தேர்தலுக்கு முன் தொடங்கிய விஜய்யின் பொய்ப் பிரச்சாரம், இடைத்தேர்தல் வரக்கூடிய நேரத்திலும் முடியவில்லை. அதே மேடை, அதே நாடகம், அதே பொய்.

கரூரில் ஜூலை 10ந் தேதி அவர் செய்த பிரச்சாரத்தில் ஏதேனும் ஒரேயொரு உண்மை பேசியிருப்பாரா? அத்தனையும் பொய்கள்தான். அதில் ஒரு சிலவற்றைப் பார்க்கலாம்.

பொய் 1 - த.வெ.க. ஆட்சி வந்ததும் இலஞ்சமும் ஊழலும் ஒழிந்துவிட்டதாம். பொதுமக்களிடம் யாராவது இலஞ்சம் கேட்டால், விஜய் ஆட்சி நடக்கிறது என்று சொல்ல வேண்டுமாம். சென்னை திருவொற்றியூரில் வீடு கட்டும் நடுத்தரக் குடும்பத்துப் பெண்மணியிடம் த.வெ.க நிர்வாகி லஞ்சப் பணம் கேட்டு தொந்தரவு செய்வதையும், பணம் தராவிட்டால் வீடு கட்ட முடியாது என மிரட்டுவதாகவும் ஊடகத்தினரிடம் கண்ணீருடன் பேசியிருக்கிறார்கள். த.வெ.க. வழக்கறிஞர் அமைப்பின் நிர்வாகியே, அரசு வழக்கறிஞர் பதவிக்கு 10 இலட்சம் முதல் 30 இலட்சம் வரை லஞ்சம் கேட்கிறார்கள் என்று, அமைச்சர் புஸ்ஸி ஆனந்த் பெயரை இழுத்துப் புகார் செய்திருக்கிறார். என்ன நடவடிக்கை எடுத்துவிட்டார் விஜய்?

செங்கல் சூளையில் வசூல், வாரச்சந்தையில் வசூல் மிரட்டல் என த.வெ.க.வினரின் அடாவடிகள் நாள்தோறும் வெளிப்படுகின்றன. அண்மையில் **த.வெ.க.வில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கும் அ.தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர்களான இரண்டு விஜயபாஸ்கர்களை வைத்துக் கொண்டு, அதிலும் ஒரு விஜயபாஸ்கரை மேடையிலேயே வைத்துக்கொண்டு, 'ஊழலை ஒழித்துவிட்டோம்' என்று எப்படித் தான் சிரிக்காமல் 'பஞ்ச்' டயலாக் பேசுகிறார் முதல்வர் விஜய்?**

பொய் 2 - த.வெ.க. ஆட்சி வந்த பிறகு தான், பொதுமக்கள் அரசு அலுவலகங்களுக்கு வந்தால், அதிகாரிகள் அவர்களை மிகுந்த மரியாதையுடன் நடத்துகிறார்களாம். இதுவும் விஜய் பேச்சுதான். அதே திருவொற்றியூரில், த.வெ.க. அரசின் நிர்வாக அவலட்சணத்தால் இரவு முழுவதும் ஏற்பட்ட மின்தடையைப் பொறுக்க முடியாமல் மின்வாரிய அலுவலகத்திற்குச் சென்ற பொதுமக்களை அங்கிருந்த அதிகாரிகளும் அலுவலர்களும் எந்த அளவுக்கு இழிவுபடுத்தி விரட்டினர் என்பது ஊடகங்களிலேயே வீடியோவாக வெளியாகியுள்ளது. 'ரீல்ஸ்' முதல்வருக்கு இதையெல்லாம் பார்க்க நேரமில்லையா? விருப்பமில்லையா?

கோவி.லெனின்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்.

பொய் 3 - சட்டமன்றத்தில் 'பார்ட்டி ஃபண்ட்' என்று விஜய் பேசத் தொடங்கியதும் எதிர்க்கட்சியான தி.மு.க.வின் சட்டமன்ற உறுப்பினர்கள் வெளியே ஓடிவிட்டார்களாம். கரூர் நாடக மேடையில் விஜய்யின் அண்டப்புளுகு வசனம் இது. ஆளுநர் உரை மீதான விவாதங்களுக்குப் பதிலளித்து முதலமைச்சர் என்ற முறையில் **விஜய் பேசும்போது, 'பார்ட்டி ஃபண்ட்' என்று குற்றம்சாட்டினார். எதிர்க்கட்சித் தலைவரான தி.மு.க.வின் இளைஞரணிச் செயலாளர் எழுந்து, "எந்த பார்ட்டி? எந்த பார்ட்டிக்கான ஃபண்ட் என்பதை ஆதாரத்துடன் தெரிவிக்க வேண்டும். அப்போதுதான் முதலமைச்சர் வைக்கும் குற்றச்சாட்டுக்கு எங்களால் ஆதாரங்களுடன் பதில் சொல்ல முடியும்" என்று பேரவைத் தலைவரிடம் தெளிவாகச் சொன்னார். அதன்பிறகாவது, எந்த பார்ட்டி? எவ்வளவு ஃபண்ட்? என்று சட்டமன்றத்தில் ஏதேனும் புள்ளிவிவரத்துடன் முதலமைச்சர் பேசினாரா? அவதூறுகளை மட்டுமே அவர் தொடர்ந்து பேசியதாலும், அதை பேரவைத்தலைவர் அனுமதித்ததாலும் எதிர்க்கட்சிக்குரிய ஜனநாயக நெறிமுறைப்படி தி.மு.க.வினர் வெளிநடப்பு செய்தனர். சட்டமன்றத்தில் ஆதாரம் காட்டிப் பேச வக்கில்லாத விஜய்க்கு, கரூர் மேடை நாடகத்திலும் ஆதாரத்தைக் காட்டும் தெம்பில்லை.**

கரூரில் கடந்த செப்டம்பரில், 'பாட்டிலுக்கு பத்து ரூபாய்' என்று பாட்டு பாடிய விஜய், இந்த முறை அந்தக் கரூரில் ஏன் பாடவில்லை? பாடினால், பாட்டிலுக்கு 20 ரூபாய் என்று பாடவேண்டியிருக்கும். அந்த பாட்டில் ஃபண்ட், எந்த பார்ட்டிக்கான ஃபண்ட் என்று வெளிப்படையாகப் பேச விஜய்யால் முடியுமா?

பொய் 4 - கரூர் மாவட்டக் கழகச் செயலாளரான செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ ஊரைவிட்டு ஓடிவிட்டார் என்று பச்சைப் பொய் ஒன்றை விஜய் அந்த மேடையில் அவிழ்த்துவிட்டு, 'ஓடு..ஓடு..ஓடு..' என்று பாட்டும் பாடித் தன் தரம் இவ்வளவுதான் என்பதைக் காட்டினார்.

செந்தில்பாலாஜி எங்கே ஓடினார்? விஜய் தான் நேருக்கு நேர் எதிர்கொள்ளத் துணிச்சலின்றி, தன்னுடைய கரூர் கூட்டத்துக்கு முன்பாக செந்தில்பாலாஜியைக் கைது செய்ய வேண்டும் என்றும், கரூர் உயிர்ப்பலிகள் நடந்தபோது விசாரணை நடத்திய காவல்துறை அதிகாரிகள் ஒருவர் கூட அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடாது என்றும் முடிவெடுத்து, செந்தில் பாலாஜி மீது பொய்வழக்குப் போட்டும், கால்துறையினர் மீது பணியிட மாற்ற நடவடிக்கை எடுத்துவிட்டும்தான் கரூருக்கு வந்தார். ஒரு ஹீரோவுக்கு ஏன் இத்தனை பயம்? எதற்காக அதிகாரத் துஷ்பிரயோகம்? விஜய் அரசு போட்ட பொய் வழக்கை செந்தில்பாலாஜி சட்டரீதியாகச் சந்தித்து, முன்ஜாமீன் பெற்று, இங்குதான் இருக்கிறார். கரூரிலிருந்து கடந்த செப்டம்பர் மாதம் 27ஆம் தேதியே ஓடியவர் விஜய் தானே, அவருக்குத்தானே அவர் பாடிய பாட்டு பொருந்தும்?

பொய் 5 - ஓட்டுக்குப் பணம் கொடுக்கும் வழக்கத்தை ஒழித்து, த.வெ.க ஆட்சிக்கு வந்துள்ளதாகப் பெருமை பேசிக் கொள்கிறார் விஜய். த.வெ.க.வின் ஓமலூர் வேட்பாளராகப் போட்டியிட்டவர், கட்சிக் கூட்டத்திலேயே வெளிப்படையாக 'ஓட்டுக்கு 2000 ரூபாய் கொடுத்தது' குறித்துப் பேசியதை விஜய் வசதியாக மறந்து போய்விடுகிறார். ஒரு வேட்பாளர் வெளியே சொல்லிவிட்டார். மற்றவர்களின் யோக்கியதை இனி மெல்ல மெல்ல வெளியே வரும். ஓட்டுக்குப் பணம், மாற்றுக் கட்சி வேட்பாளர்களிடம் நடத்திய பேரம் அனைத்தும் ஊரறிந்த ரகசியங்கள்தான்.

பொய் 6 - த.வெ.க ஆட்சி வந்ததும் பல திட்டங்கள் நிறை.வேற்றப்பட்டு விட்டதாக விஜய் கூச்சமேயின்றி பேசினார். தேர்தலுக்கு முன்பு அவர் பேசிய போதெல்லாம் "நிறைவேற்றக்கூடிய வாக்குறுதிகளைத் தான் கொடுப்பேன்" என்றார். கரூர் கூட்டத்தில் தன் வாக்குறுதிகளை priority (முன்னுரிமை) அடிப்படையில் நிறைவேற்றுவேன் என்கிறார். விஜய் அவரது படங்களில் இரட்டை வேடங்களில் நடித்திருக்கலாம். ஆனால், இரட்டை நாக்குடன் பேசக்கூடாது. த.வெ.க ஆட்சியின் திட்டங்கள் பற்றி **கரூரில் பேசிய விஜய், அவர் தொடங்கி வைத்த 'சிங்கப் பெண்' திட்டம் பற்றி ஏன் பேசவில்லை? பெண்கள் பாதுகாப்பு பற்றி ஆட்சிக்கு வருவதற்கு முன் கூப்பாடு போட்டவர், இப்போது ஆட்சியாளர்களே 'போக்சோ' சட்டத்தை எதிர்கொள்ளும் நெருக்கடியில் இருக்கும்போது, ஏன் அது பற்றி வாய் திறக்க மறுக்கிறார்? நேர்மையான ஆட்சி நடத்துவதாக இருந்திருந்தால், த.வெ.க.வின் எம்.எல்.ஏ., நிர்வாகிகள் ஆகியோர்தான் சிங்கப்பெண்களின் பிடியில் சிக்கியிருப்பார்கள்.**

'யோக்கியன் வருகிறார்..சொம்பைத் தூக்கி உள்ளே வை' என்பது போலத்தான், கரூர் மேடையில் விஜய் நடத்திய கண்ராவி நாடகம் அரங்கேறியிருக்கிறது.

மாவீரன் அழகுமுத்துக்கோன் பிறந்தநாள் விழா:

தடுத்து நிறுத்திய காவல் துறையினர்! நடந்தே சென்ற கனிமொழி கருணாநிதி எம்.பி.!

தூத்துக்குடி, ஜூலை 12 -

மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் பிறந்தநாள் விழாவையொட்டி அவரது நினைவிடத்திற்கு மரியாதை செலுத்த சென்ற கனிமொழி கருணாநிதி எம்.பி. போலீசாரால் தடுத்து நிறுத்தப்பட்ட அவர், நடந்து சென்று மரியாதை செலுத்தினார்.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி அருகே உள்ள காட்டலங்குளத்தில் நேற்று நடைபெற்ற மாவீரன் அழகுமுத்துக்கோன் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்த வந்த தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் வாகனம் காவல் துறையினரால் தடுத்து நிறுத்தப்பட்டது, காவல்துறையினரிடம் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களும் கழக நிர்வாகிகள் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரும் வாகனத்தை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து, தனது வாகனத்தில் இருந்து இறங்கி சுமார் ஒரு கிலோமீட்டர் தூரம் நடந்து சென்று அழகுமுத்துக்கோன் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

உடன் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, திருநெல்வேலி மேயர் கே.ஆர்.ராஜு, ஒன்றிய செயலாளர்கள் காசிவிஸ்வநாதன், ராதாகிருஷ்ணன், முருகேசன், கருப்பசாமி இருந்தனர்.

அங்கன்வாடி ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்!

தூத்துக்குடி, ஜூலை 12-

தூத்துக்குடியில் அங்கன்வாடி அலுவலர்கள் மற்றும் உதவியாளர்கள் 200க்கும் மேற்பட்டோர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாவட்ட தலைவர் வசந்தா தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், 50 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து வரும் அங்கன்வாடி ஊழியர்களை, ஒன்றிய அரசு தனியார் மயமாக்குவதை உடனடியாக கைவிட வேண்டும், அங்கன்வாடி ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும், காலி பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும், ஊதியமாக 28 ஆயிரம் வழங்க வேண்டும் பணிக்கொடையாக ரூபாய் 10 லட்சமும், உதவியாளருக்கு ரூபாய் ஐந்து லட்சமும் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட 16 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் ஏராளமான அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர்கள் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

புதிதாக பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசு தங்களது கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றவில்லை என்றால் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடுவோம் என தெரிவித்தனர்.

கோட்டையில் வசூலைத் தொடங்கிய அமைச்சர்களின் பி.ஏ.க்கள்!

சென்னை, ஜூலை 12-

அமைச்சர்களுக்கு ஆசை வார்த்தை காட்டியும், நெருக்கடிகளை எடுத்துக் கூறியும், அவர்களின் உதவியாளர்கள் வசூலை தொடங்கியுள்ளதாக, சென்னை தலைமைச் செயலகத்தில் புகைச்சல் கிளம்பியுள்ளது.

த.வெ.க, அரசு பொறுப்பேற்ற நிலையில், 34 அமைச்சர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். கூட்டணி கட்சியான காங்கிரசுக்கு இரண்டு, வி.சி.க, மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு தலா ஒரு அமைச்சர் பதவி வழங்கப்பட்டு உள்ளது.

முதல்வராக விஜய் பொறுப்பேற்ற போது, 'வெளிப்படையான, ஊழல், லஞ்சமற்ற நிர்வாகத்தை வழங்குவோம்' என்று உறுதியளித்திருந்தார். அன்று முதல் ஒவ்வொரு ஆய்வுக் கூட்டத்திலும், அமைச்சரவைக் கூட்டத்திலும், முதல்வர் விஜய் இதையே கூறி வருகிறார்.

பொதுமக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகளிலும், அந்த உத்தரவாதத்தை அளித்து வருகிறார். த.வெ.க, அமைச்சரவையில் செங்கோட்டையனை தவிர, மற்ற அனைவரும் புதியவர்கள். பலரும் ஏழ்மையான குடும்பத்தை சேர்ந்தவர்கள்.

இவர்களுக்கு அரசியல் உதவியாளர்களாக நியமிக்கப்பட்டவர்களால், அந்த எண்ணத்தில் ஓட்டை விழுந்துள்ளது.

அமைச்சர்களுக்கு ஆசை வார்த்தைகள் காட்டி, நெருக்கடிகள் கொடுத்து வரும் உதவியாளர்கள், மாவட்ட அதிகாரிகளுடன் இணைந்து வசூலை துவங்கியுள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து, தலைமை செயலக வட்டாரத்தில் கூறப்படுவதாவது:-

முதல்வருடன் இணைந்து மக்கள் சேவையாற்ற முயற்சித்த சில அமைச்சர்களின் எண்ணத்தை, உதவியாளர்களும், அதிகாரிகளும் மாற்றி வருகின்றனர். 'இந்த ஆட்சி எப்போது வேண்டுமானாலும் மாறி விடும். அதற்குள் செட்டிலாகி விடுங்கள் என, ஆசை வார்த்தை கூறியுள்ளனர்.

'ஏழு சட்டசபை தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடக்கவுள்ளது. சட்டசபை பொதுத்தேர்தலை போல இடைத்தேர்தலை நினைக்க வேண்டாம். மாவட்ட பொறுப்பு அமைச்சர்கள் தான் பெரும் தொகையை செலவு செய்தாக வேண்டும்.

'ஓட்டுக்கு பணம் தராவிட்டாலும், பிரச்சாரத்திற்கு வரும் நிர்வாகிகள், தொண்டர்களுக்கு உணவு உள்ளிட்ட வசதிகளை வழங்க வேண்டும். அதற்கு நிதி ஆதாரத்தை திரட்ட வேண்டும்' என, எடுத்து கூறியுள்ளனர்.

முதல்வருக்கு தெரிந்தால் பிரச்சினையாகி விடும் என, அமைச்சர்கள் சிலர் பயந்துள்ளனர். அதற்கு உதவியாளர்களும், அதிகாரிகளும், எங்கு வசூல் செய்தால் பிரச்சினை வராது என்பது, தங்களுக்கு தெரியும் என்று நம்பிக்கை அளித்து உள்ளனர்.

இதையடுத்து, பணியிடமாற்றம், பதவி உயர்வில் துவங்கி, 'டெண்டர் வரை வசூல் வேட்டை தொடங்கியுள்ளது. இதற்கு வசதியாக பெரும்பாலான துறைகளில், மதிப்பீட்டு தொகை குறிப்பிடாமல் ஒப்பந்தம் கோரப்பட்டு உள்ளது.

இவ்வாறு அந்த வட்டாரத்தில் கூறப்படுகிறது.